முன்னாள் புழல் ஒன்றிய பெருந்தலைவர் திருமதி தங்கமணி திருமாலின் கணவர் முன்னாள் புழல் ஒன்றிய செயலாளர் முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் வி.திருமால் படத்திறப்பு நிகழ்ச்சி அவரது இல்லத்தில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ் முன்னிலையில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அன்னாரின் திருஉருவப்படத்தை திறந்து வைத்து புகழுரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் சசிகாந்த் செந்தில் எம்.பி., மாவட்டத் துணைச் செயலாளர் ராமகிருஷ்ணன், மாதவரம் பகுதி செயலாளர் துக்காராம் சோழவரம், ஒன்றிய செயலாளர் மீ.வே கருணாகரன் மற்றும் புழல் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

36வது வட்டக் கழக பாக முகவர்கள் கூட்டம்!

ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 13-

இது குறித்து வட்டக் கழக செயலாளர் ஏ.ஆர். ஆர்.மலைச்சாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்குப் பகுதி 36-வது வட்ட கழகத்தின் சார்பில் பாக முகவர்கள் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கூட்டம் இ.எச்.ரோட்டில் அமைந்துள்ள ரேவதி கிராண்ட் திருமண மண்டபத்தில் இன்று (13.06.2025 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணி அளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட. பகுதி நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2) மற்றும் பாக கமிட்டி உறுப்பினர்கள் (BLC) தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறார்.

இவ்வாறு வட்டச் செயலாளர் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி தெரிவித்துள்ளார்.

தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொதுமக்கள் குடியிருப்போர் நலசங்கங்களின் நிர்வாகிகள், குறைந்த மின் அழுத்தம், மின்வெட்டு தொடர்பாக தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா. எம்.எல்.ஏ., தொலைபேசி வாயிலாகவும் நேரிடையாகவும் புகார் தெரிவித்ததை தொடர்ந்து தாம்பரம் மின்சார வாரிய அலுவலகத்தில் சென்னை தெற்கு மின்சார வட்டம் –II மேற்பார்வை பொறியாளர் எஸ்.பழனிவேல் செயற்பொறியாளர் எஸ்.கே.கருப்பசாமி மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்தார். மேலும் தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் தற்போது நடைபெற்று வரும் மின்சார வாரிய பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! வானவில் விஜய் தலைமையில்

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் அர்ச்சகர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக ஆறுமுக சுவாமிகள் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன்.13 -

ஜூன் 3 முத்தமிழ் அறிஞரின் செம்மொழி நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் "செம்மொழி - 9, அமைதி காக்கும் மெய்ஞானம்! அதுவே கலைஞர் தமிழ் ஞானம்" எனும் தலைப்பில் அர்ச்சகர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (14.06.2025 - சனிக்கிழமை) மாலை 4 மணிக்கு, டபள்யூ.பி.ஏ. சௌந்தரிபாண்டியன் பள்ளி வளாகம், அயனாவரத்தில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் வானவில் விஜய் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், பகுதிக் கழகச் செயலாளர்கள் வே.வாசு, கூ.பீ.ஜெயின் எம்.சி, மற்றும் டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா. ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, எ.வேதா, ச. மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ. துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா. ஜானி, சொ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ். பாபு, ம.ஜெகதீஸ்வரன், வெ.மகேந்திரன், சி.எம். பாரதி, டோ.பால்ஸ்டீபன், ம.முனுசாமி, சே.ராஜா, ஆர்.சீனிவாசன், ப.கார்த்திக், எம்.சிவராஜ், ப.மணி கண்டன், டி.கே.நல்லரசு, சு.கமலக்கண்ணன், க. சிலம்பரசன், எஸ்.மோகன் ராஜ், தே.ஆகாஷ் (எ) ஹரி ஹரசுதன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக ஆறுமுக சுவாமிகள் ஆகியோர் அர்ச்சகர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஓ.ஏ.நாகலிங்கம் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

97 வது வட்டக் கழகச் செயலாளர் விக்னேஷ் சீனிவாசன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.எஸ். மணிகண்டன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் கூடுதல்

பள்ளிக் கட்டடம் - சமூக நலக்கூடம் - கால்வாய் புனரமைப்பு பணிகள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 13-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் கூடுதல் பள்ளிக் கட்டடம், சமூக நலக்கூடம் மற்றும் கால்வாய் புனரமைப்பு, Eco Blocks மூலம் மழைநீர் சேமிக்கும் வசதி ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.06.2025) கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-139, ஜாபர் கான்பேட்டை, சென்னை உயர்நிலைப்பள்ளியில் மூலதன நிதியின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், ஜாபர்கான் பேட்டையில் உள்ள மாநகராட்சி சமூக நலக் கூடத்தினை ரூ.93.27 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி மற்றும் சுந்தரமூர்த்தி தெரு முதல் கண்ணம்மாள் தெரு வரை உள்ள கால்வாயில் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைக்கும் பணி ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், மழைநீரை சேமிக்கும் வகையில் வார்டு-140க்குட்பட்ட டாக்டர் அம்பேத்கர் விளையாட்டுத் திடலில் ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுடைய Eco Blocks மூலம் மழைநீர் சேமிக்கும் வசதியினைத் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி முன்னெடுத்துள்ள புதுமையான மழைநீர் சேமிப்பு திட்டமாக, 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட Eco Blocks மூலம் மழைநீர் சேமிக்கும் வசதி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இது நிலத்தடி நீரை மேம்படுத்தவும், சென்னை மாநகரில் ஏற்படும் வெள்ளத்தைத் தடுப்பதற்கும், முக்கியமான நிலைத்த நீர் மேலாண்மை முயற்சியாகும். மழைநீரை சிக்கனமாக சேகரித்து, தரையை ஊடுருவச் செய்வதற்கான வடிவமைப்புடன் இந்த முறை உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் பூங்கா, நடைபாதை, சாலை மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற பகுதிகளில் மழைநீர் ஊடுருவ முடியாத இடங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மழைநீர் ஊடுருவும் வகையில் ஸ்பான்ச் போன்ற அமைப்பாக மாற்றி, அதன்பின் நிலத்தடி நீர் செறிவூட்டலை துரிதப்படுத்த ஆழ் துறை கிணறு அமைக்கப்பட்டு சீரமைக்கப்படுகிறது. இதன் மூலம் மழைநீர் நிலத்தில் ஊடுருவி நிலத்தடி நீரை மேம்படுத்தி, வெள்ள அபாயத்தை குறைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில், மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ப. சுப்பிரமணி, எம். ஸ்ரீதரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொகுதிப் பொறுப்பாளர் எஸ்.மோகன் ஆலோசனை வழங்கினார்!

திருவொற்றியூர் 11வது வட்ட பாக முகவர்கள் பி.எல்.ஏ.2 - பி.எல்.சி. ஆலோசனை- ஆய்வுக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு முன்னிலை! குறுத்து சி.முனுசாமி ஏற்பாடு!

சென்னை, ஜூன்.13-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 11வது வட்ட கழக சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு முன்னிலையில் 11வது வட்டக் கழக செயலாளர் குருத்து சி.முனுசாமி ஏற்பாட்டில் 11-6-2025 புதன்க்கிழமை அன்று மாலை 7மணியளவில், பாக-முகவர்கள் BLA-2 / BLC ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் தி. நகர் எஸ்.மோகன் தலைமையேற்று

2026 சட்டமன்ற தேர்தல் குறித்தும், கழக ஆக்கப் பணிகள், திண்ணை பிரச்சாரங்கள், உறுப்பினர்கள் சேர்த்தல், எவ்வாறு வாக்குகள் பெறுவது போன்ற ஆலோசனைகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், கிழக்கு பகுதி அவை தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி, கிழக்கு பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார், கே.பிரபாவதி, பொருளாளர் இரா.குமரேசன், வட்ட செயலாளர் எம். எல்.சரவணன் மற்றும் மாவட்ட அணியின் நிர்வாகிகள், பாக-முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதியில் உள்ள பள்ளிப்பட்டு ஒன்றியம் பொம்மராஜீ பேட்டை கிராமத்தில் உள்ள நியாய விலை கடையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ திடீரென ஆய்வு நடத்தினார். கார்டுதாரர்களுக்கு வழங்க வேண்டிய அரிசி பருப்பு எண்ணெய் சர்க்கரை உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் தரம் இருப்பு விவரங்களை சரி பார்த்து ரேஷன் பொருட்கள் வாங்க வந்திருந்தபொதுமக்களிடம் அனைத்து ரேஷன் பொருட்களும் முறையாக வழங்கப்படுகிறதா என கேட்டு அறிந்தார். உடன் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய செயலாளர் ஜி.ரவீந்திரா, உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ்

அண்ணாநகர் மண்டலத்தில் புதிய மகப்பேறு மருத்துவமனை கட்டும் பணி!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 13-

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அண்ணாநகர் மண்டலத்தில் புதிய மகப்பேறு மருத்துவமனை கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்த மருத்துவமனைக் கட்டடமானது, 1275 ச.மீ. பரப்பளவிலான இடத்தில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்கள் என தலா 746 ச.மீ., அளவுடன் 2238 ச.மீ. பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இதில் 2 அறுவை சிகிச்சை அறைகள், 41 படுக்கைகள் கொண்ட படுக்கை வசதிகள், அவசர சிகிச்சை பிரிவு, மருந்தகம், ஸ்கேன், இரத்த சேகரிப்பு அறை, எக்ஸ்ரே வசதிகள், 2 மின் தூக்கிகள், 2 படிக்கட்டுக்களுடன் NICU கொண்ட நவீன மகப்பேறு மருத்துவமனையாக அமைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள். ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்று, திட்டப்பணிகளை விரைந்து செயல்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் ஆர். பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெற்றி அழகன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் கற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர்கள் கூ.பி.ஜெயின், திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி எஸ். தனலட்சுமி, டி.வி.செம்மொழி மற்றும் தொடர்புடைய சேவைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 10வது வட்டக் கழகம் சார்பில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு முன்னிலையில் வட்ட கழக செயலாளர் எஸ்.தமிழ்செல்வன் ஏற்பாட்டில் பாகமுகவர்கள் BLA2 / BLC ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் தி.நகர் எஸ்.மோகன் தலைமையேற்று ஆலோசனை வழங்கினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன், எம்.எல்.சரவணன் மற்றும் மாவட்ட அணியின் நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம்

இளைஞர் அணி சார்பில் நலஉதவிகள் வழங்கல்!

நாமக்கல், ஜூன் 13-

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பாக ஜூன் 3 முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆணைக்கிணங்க, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அறிவுறுத்தல் படி, அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இராசிபுரம் நகர கழக செயலாளர் என்.ஆர்.சங்கர் தலைமையில், இராசிபுரம் நகர மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர் முன்னிலையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் ஆலோசனையின் படி நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் ஏற்பாட்டில் ராசிபுரம் புதிய பஸ் நிலையம் அருகே 500 பேருக்கு சர்க்கரைப் பொங்கல், தக்காளி சாதம், புளி சாதம் அன்னதானம் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச நோட்டு புத்தகம், பேனா வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் ராஜேஷ்பாபு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சுதா ஜெயக்குமார், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் தோலட்சுமி, நகர இளைஞரணி அமைப்பாளர் யோகராஜன் மற்றும் நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக மாவட்ட கழக செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசணைப்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நல்லூர் ஊராட்சியில் அடங்கிய அண்ணாசிலை அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி ஏழை எளிய மக்களுக்கு மதிய உணவு வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் பொன்.கோதண்டன், பா.சேகர், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் நா.பரசுராமன், இரா.கிருஷ்ணமூர்த்தி, மு.சீனிவாசன், ஆர்.சி.சிவசங்கர், க.பிரபு, செந்தில்குமார், வள்ளி சின்னதுரை, இராமலிங்கம், நா.வரதன், மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை காந்தி நகர் மேற்கு கிளைக் கழக பிரதிநிதி சி.கிருஷ்ணமூர்த்தி சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 11வது வட்டக் கழகம் சார்பில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு முன்னிலையில் 11வது வட்டக் கழக செயலாளர் குருத்து சி.முனுசாமி ஏற்பாட்டில் பாகமுகவர்கள் BLA2 / BLC ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் தி.நகர் எஸ்.மோகன் தலைமையேற்று ஆலோசனைகள் வழங்கினார். இதில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன், எம்.எல்.சரவணன் மற்றும் மாவட்ட அணியின் நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.